## சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – ஊரகப் பகுதிகளில் உள்ள கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு, வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு ஆகியவற்றை மறுசீரமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.5(1)] துறை

அரசாணை (நிலை) எண்.30

நாள்: 22.09.2020
சார்வரி, புரட்டாசி 06,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.10, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 10.01.2013.
2. அரசாணை (நிலை) எண்.215, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 19.07.2012.
3. அரசாணை (நிலை) எண்.15, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் [சந.8(1)] துறை, நாள் 11.03.2015.

மீண்டும் படிக்க:

4. சமூக பாதுகாப்பு ஆணையரின், கடித எண்.2662/மா.கு.பா.ச/2019, நாள் 25.02.2020.

------

ஆணை:

மேலே ஒன்று முதல் மூன்று வரையுள்ள அரசாணைகளில் முறையே ஊரகப் பகுதிகளில் கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக பாதுகாப்பு ஆணையர் ஊரகப் பகுதிகளில் உள்ள கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களின் அமைப்பில் சில மாற்றங்களை கொண்டு வருவதற்கும், அவற்றின் பணிகளை வரையறை செய்வதற்கும், தற்போது உள்ள கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்களை மறுசீரமைக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. சமூக பாதுகாப்பு ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்களை பின்வருமாறு மாற்றியமைத்தும், அவற்றின் பணிகளை கீழ்க்கண்டவாறு வரையறை செய்தும் ஆணையிடுகிறது:-

**(i)** <u>கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு</u>
**<u>(Village Level Child Protection Committee)</u>**

| | | |
|---|---|---|
| 1 | கிராம பஞ்சாயத்து தலைவர் | தலைவர் |
| 2 | கிராம நிர்வாக அலுவலர் | உறுப்பினர் – செயலர் |
| 3 | மேல்நிலை (அ) உயர்நிலை பள்ளியின் தலைமையாசிரியர் அப்படி இல்லையெனில் நடுநிலை (அ) தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் | உறுப்பினர் |
| 4 | இரண்டு குழந்தை பிரதிநிதிகள் (உள்ளூர் பள்ளி தலைமையாசிரியரால் பரிந்துரைத்து) | உறுப்பினர்கள் |
| 5 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் உறுப்பினர் | உறுப்பினர் |
| 6 | அங்கன்வாடி பணியாளர் | உறுப்பினர் |
| 7 | கிராம சுகாதார செவிலியர் / ANM | உறுப்பினர் |
| 8 | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி (கிராமத்தில் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி) | உறுப்பினர் |
| 9 | கிராமத்தில் செயல்படும் சுய உதவி குழு உறுப்பினர் | உறுப்பினர் |
| 10 | உள்ளூர் காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் | உறுப்பினர் |
| 11 | ஆஷா பணியாளர் (ASHA – Accredited Social Health Activist under National Health Mission Tamil Nadu) | உறுப்பினர் |
| 12 | கிராம பஞ்சாயத்து உறுப்பினர் (தலைவர் அவர்களால் சுழற்சி முறையில் நியமனம் செய்யப்படவேண்டும்) | உறுப்பினர் |
| 13 | உள்ளூர் இளைஞர் அமைப்பு பிரதிநிதி | உறுப்பினர் |
| 14 | குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி | உறுப்பினர் |

**(ii)** <u>வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு</u>
**<u>(Block Level Child Protection Committee)</u>**

| | | |
|---|---|---|
| 1 | தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய தலைவர் | தலைவர் |
| 2 | வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) | உறுப்பினர் – செயலாளர் |

...3...

| | | |
|---|---|---|
| 3 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் (அ) பிரதிநிதி. | உறுப்பினர் |
| 5 | வட்டார தொடக்க கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 6 | மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம் | உறுப்பினர் |
| 7 | காவல் ஆய்வாளர் / காவல் சார்பு ஆய்வாளர் | உறுப்பினர் |
| 8 | உதவி தொழிலாளர் ஆய்வாளர் | உறுப்பினர் |
| 9 | வருவாய் ஆய்வாளர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை) | உறுப்பினர் |
| 10 | 3 கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு தலைவர்கள் (தலைவரால் சுழற்சி முறையில் நியமனம் செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 11 | 2 தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் (வட்டார வளர்ச்சி அலுவலரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 12 | 3 சுய உதவி குழு உறுப்பினர்கள் | உறுப்பினர்கள் |
| 13 | குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி (மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |
| 14 | சைல்டு லைன் பிரதிநிதி | உறுப்பினர் |

**(iii)** <u>மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு</u>
**<u>(District Level Child Protection Committee)</u>**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2 | மாவட்ட நீதிபதி (அ) தலைமை குற்றவியல் நடுவர் (அ) குற்றவியல் நடுவர் | துணைத் தலைவர் |
| 3 | காவல் கண்காணிப்பாளர் / காவல் ஆணையர் | உறுப்பினர் |
| 4 | காவல் ஆய்வாளர் / காவல் சார்பு ஆய்வாளர், தமிழ்நாடு இரயில்வே காவல் துறை | உறுப்பினர் |
| 5 | மாவட்ட சமூக நல அலுவலர் | உறுப்பினர் |
| 6 | மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர் | உறுப்பினர் |
| 7 | முதன்மை கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 8 | முதல்வர், மருத்துவ கல்லூரி / மாவட்ட மருத்துவ அலுவலர் | உறுப்பினர் |
| 9 | நன்னடத்தை அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் துறை) | உறுப்பினர் |

(த.பி.பா.)

| | | |
|---|---|---|
| 10 | தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம் அவர்களது ஆட்சி எல்லைக்குட்பட்டு) | உறுப்பினர் |
| 11 | மாவட்டத்தில் செயல்படும் கூர்நோக்கு இல்லம் / குழந்தைகள் இல்லம் / சிறப்பு இல்ல கண்காணிப்பாளர் (அ) பொறுப்பு அலுவலர் | உறுப்பினர் |
| 12 | தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பஞ்சாயத்தின் ஒரு உறுப்பினர் (மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்படுபவர்) | உறுப்பினர் |
| 13 | ரோட்டரி / அரிமா சங்கத்தின் மாவட்ட ஆளுநர் | உறுப்பினர் |
| 14 | 2 தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் (மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்படுபவர்) | உறுப்பினர்கள் |
| 15 | துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை | உறுப்பினர் |
| 16 | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) | உறுப்பினர் |
| 17 | திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| 18 | திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் | உறுப்பினர் |
| 19 | 1 நகர்ப்புற குழந்தை பாதுகாப்பு குழு தலைவர் (மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்) | உறுப்பினர் |
| 20 | சைல்டு லைன் பிரதிநிதி | உறுப்பினர் |
| 21 | 2 வட்டார குழந்தைகள் பாதுகாப்புக் குழு தலைவர்கள் (மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்) | உறுப்பினர்கள் |
| 22 | 2 குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி (மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்பட வேண்டும்) | உறுப்பினர் |
| 23 | தலைவர் / உறுப்பினர் குழந்தை நலக்குழு | உறுப்பினர் |
| 24 | சமூகப் பணி உறுப்பினர், இளைஞர் நீதிக் குழுமம் | உறுப்பினர் |
| 25 | மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் | உறுப்பினர் – செயலர் |

...5...

4. பணிகள்:-

- குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது காலஆற்றமின்றி கூட்டம் நடத்தப்பட வேண்டும். (ஜனவரி முதல் மார்ச் வரை, ஏப்ரல் முதல் ஜூன் வரை, ஜூலை முதல் செப்டம்பர் வரை மற்றும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆகிய காலகட்டங்களில் ஒரு முறையாவது கூட்டம் நடத்தப்பட வேண்டும்)

- கூட்டத்தில் குழந்தைகள் கடத்தப்படுதல், குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல், குழந்தை பாதுகாப்பை பற்றி கலந்தாலோசித்தல் மற்றும் இதுதொடர்பாக கிராம பகுதியில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- குழந்தைகளை தவறாது பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- குழந்தை பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் தவறான நடைமுறைகளுக்கு எதிராக செயல்படுதல்.

- குழந்தை பிறப்பு பதிவு, ஆதார் அட்டை பதிவு, பள்ளியில் சேர்த்தல், குழந்தைகளுக்கு காலம் தவறாது தடுப்பு ஊசி போடுதல் மற்றும் மருத்துவ பரிசோதனை செய்தல் போன்ற நல்ல நடைமுறைகளுக்கு ஊக்கம் அளித்தல்.

- குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் இருந்து இல்ல விடுவிப்பு செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகள் ஆகியோரின் மறுவாழ்வு நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் உறுதுணையாக இருத்தல்.

- குழந்தை பாதுகாப்பு சேவைகள் (அ) இளைஞர் நீதி நிதி மூலம் நிதி ஆதரவு பெற்ற குழந்தைகளை கண்காணித்தல்.

- குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களை தடுத்தல்.

- பெண் சிசுக் கொலையை குறைத்து, பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல்.

- அப்பகுதியில் நடக்கும் குழந்தைகள் பாதுகாப்புக்கு எதிரான செயல்கள் குறித்து உரிய அதிகார அமைப்புகளுக்கு தெரிவித்தல்.

(த.பி.பா.)

- கூட்ட அறிக்கையை தயார் செய்தல் மற்றும் தயார் செய்த அறிக்கையை மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கும் பொறுப்பு குழுவின் உறுப்பினர் செயலரை சார்ந்தது.

- அறிக்கையை கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து, 10 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- கிராம / வட்டார குழந்தை பாதுகாப்பு குழுக்களின் கூட்ட அறிக்கையை மூன்று மாதத்திற்கு ஒருமுறை சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்திடம் சமர்ப்பிப்பது மாவட்ட ஆட்சியரின் பொறுப்பு ஆகும்.

- கிராமத்தில் குழந்தை பாதுகாப்பை தொடர்ந்து ஆய்வு செய்வது அல்லது கூட்ட அறிக்கையின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக தகுந்த துறை அலுவலருக்கு சமூகப் பாதுகாப்பு இயக்குநரால் தகவல் அனுப்பப்படும்.

- வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவானது கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களுக்கு இடையே இணைப்பு பாலமாக செயலாற்ற வேண்டும்.

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழுவானது கிராம அளவிலான மற்றும் வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுக்களுக்கு உரிய விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை நடத்துவதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

குழந்தைகள் பாதுகாப்பு குறித்து நமது கிராமங்கள் அடைய வேண்டிய இலக்குகள்

- பத்தாம் வகுப்பு வரை அனைத்து குழந்தைகளும் பள்ளி செல்வதை உறுதிப்படுத்துதல்
- குழந்தை தொழிலாளர்கள்அறவே இல்லாமல் உறுதிசெய்தல்
- 100% நோய்தடுப்பு முறைகள் கையாளப்படுதல்
- ஊட்டசத்து பற்றாக்குறை இல்லாத கிராமங்களை உறுதிசெய்தல்
- பெண் குழந்தை பிறப்பை கட்டுப்படுத்தும் கருச்சிதைவுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுதல்.
- குழந்தைகளுக்கு தீங்குகள், கொடுமைகள் நிகழாமல் பாதுகாத்தல்.
- குழந்தை கடத்தல் நிகழ்வதை தடுத்தல்.
- தீண்டாமையை ஒழித்து சமூக ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்றவை "நமதுகிராமம்" குறிப்பிட்டுள்ள இலக்குகள் ஆகும்.

...7...

குழந்தை பாதுகாப்பு குழு கூட்டங்கள் நடத்துதல் தொடர்பான பொதுவான விதிகள்

- மேலே குறிப்பிட்டுள்ள காலமுறை கூட்டங்கள் தவிர்த்து தேவைப்படின் அவசியமான காலங்களில் மேற்படி குழந்தை பாதுகாப்பு குழுக்களின் தலைவர்கள் அவசர கால கூட்டங்களை நடத்தலாம்.

- குழந்தை பாதுகாப்பு குழுக்களின் தலைவர் அல்லது உறுப்பினர் அவசரம் என கருதினால் கூட்ட விவாத பொருளாக சேர்க்காத ஏதேனும் ஒரு கூட்ட விவாத பொருளை கூட்டத்தில் முன் வைக்கலாம்.

மேற்படி குழந்தை பாதுகாப்புக் குழுக்களின் உறுப்பினர் செயலரின் பணிகள்

- மேற்படி குழந்தை பாதுகாப்புக் குழுக்களின் உறுப்பினர் செயலர் கூட்ட அமைப்பாளராக செயல்புரிந்து காலமுறை கூட்டங்கள் முறையாக நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- ஒவ்வொரு கூட்டத்திற்கான அறிவிப்புகள், அழைப்பிதழ்கள், கடிதங்கள் ஆகியவற்றுடன் நடத்த இருக்கும் கூட்டத்திற்கான விவாத பொருள் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் முன் கூட்டியே அனுப்புதல் வேண்டும்.

- குழந்தை பாதுகாப்பு குழுக்களின் சார்பாக கடிதங்கள், அறிக்கைகள் உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

- குழந்தை பாதுகாப்பு குழுவின் தலைவர் இல்லாத நிகழ்வுகளில் அவரின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. மதுமதி
அரசு செயலாளர்

பெறுநர்
சமூகப் பாதுகாப்பு ஆணையர், சென்னை – 600 010.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
ஆணையர், வருவாய் நிர்வாகத் துறை, சென்னை–5.
ஆணையர், தொழிலாளர் ஆணையரகம், சென்னை–6.
ஆணையர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–5.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை–15.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6.

(த.பி.பா.)

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை–6.
காவல் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை–4.

<u>நகல்:-</u>

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சந.2) த் துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
28/07/20.